# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜூலை 17, 2023

Weekly E-paper • July 17, 2023





## அறிவின் திறப்பும் அறியாமையின் அரங்கேற்றமும்!

சுப.வீரபாண்டியன்

## பசிப்பிணி மருத்துவர் கலைஞர்!

வெற்றிச்செல்வன்

## தக்காளி...... தக்காளி..?

தலையங்கம்

## மகளிர் நலம் பேணும் மகத்தான முதல்வர்!

சாரதாதேவி

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஜூலை 17, 2023 Weekly E-paper ● July 17, 2023

# அறிவின் திறப்பும் அறியாமையின் அரங்கேற்றமும்!

சுப.வீரபாண்டியன்

*இந்த வாரம் இரு பெரும் அறிவியல் சாதனைகள் நடந்துள்ளன. ஒன்று, மண்ணில் பிறந்திருக்கிறது, இன்னொன்று வானில் பறந்திருக்கிறது!*

*சங்கம் வளர்த்த தமிழ் மதுரையில், கலைஞர் நூற்றாண்டு நூலகம் 2 லட்சம் சதுர அடிக்கு மேற்பட்ட பரப்பில் பிறந்திருக்கிறது! சந்திராயன் 3 விண்கலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து, நிலவை ஆராய்ச்சி செய்ய வானில் பறந்திருக்கிறது!!*

*இரண்டும் மகிழ்ச்சி தருவன! இரண்டும் பாராட்டுக்குரியன! இரண்டும் எதிர்கால உலகை அறிவியல் மயமாக்க வல்லன! எனினும் ஓர் அறிவியல் தளத்தில் அறியாமை புகுந்திருப்பதையும் இங்கு நாம் சுட்டிக் காட்டியே தீர வேண்டியிருக்கிறது!*

*மதுரை நூலகமும், சந்திராயனும் அறிவின் சிறப்புகள்! ஆனால் சந்திராயன் பறப்பதற்கு முன்னால், திருப்பதிக்குச் சென்று பூஜை செய்திருப்பது அறியாமையின் அரங்கேற்றம்!*

*திருப்பதி வேங்கடாசலபதியின் அருளால்தான் விண்கலம் பறக்கிறது என்று சொன்னால், பிறகு இஸ்ரோ எதற்காக? இவ்வளவு விஞ்ஞானிகள் எதற்காக? நேரடியாகத் திருப்பதியில் பூஜை மட்டும் செய்துவிட்டு, விண்கலம் வானில் பறக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருக்கக் கூடாதா! 615 கோடி ரூபாய் நாட்டுக்கு மிச்சமாகி இருக்குமே!*

*இவையெல்லாம் மத நம்பிக்கைகள், இவற்றில் நாம் குறுக்கிடக் கூடாது என்று சிலர் சொல்கின்றனர். மத நம்பிக்கையா, மூடநம்பிக்கையா? மத நம்பிக்கை என்றே வைத்துக் கொண்டாலும், அது எந்த மதத்தின் நம்பிக்கை? இந்து மத நம்பிக்கை என்றால், இந்தியா இந்து நாடா, மதச்சார்பற்ற நாடா?*

*யார் ஒருவரின் தனிப்பட்ட நம்பிக்கையிலும் நாம் குறுக்கிடவில்லை. ஆனால் செலவு செய்யப்பட்டு இருக்கிற 615 கோடி ரூபாய் என்பது, மக்களின் வரிப்பணம். வேறு வேறு நம்பிக்கைகளை உடைய, எந்த மத நம்பிக்கையும் இல்லாத அனைத்து மக்களின் வரிப்பணம் அது! எனவே அனைவரிடமும் வரி வாங்கி, அரசு ஒரு மதத்தின் நம்பிக்கையை மட்டும் பின்பற்றக் கூடாது என்பதே நம்வாதம்!*

*இதில் பணம் மட்டுமே சிக்கலில்லை. அறிவு, பின்தள்ளப்படுகிறது என்பதே சிக்கல். அறிவியல் அறிவால், விஞ்ஞானிகளின் உழைப்பால், அரசாங்கம் கொடுத்த ஊக்கத்தால், சந்திராயன் பறக்கிறது என்பதை விட, திருப்பதி வெங்கடாசலபதியின் அருளால்தான் அது பறக்கிறது என்று சொன்னால், அது விஞ்ஞானத்தைக் கேலி செய்வதாகாதா?*






*போகட்டும், மதுரை நூலகம் திறக்கப்பட்டு இருப்பது தமிழ்நாட்டின் பெருமையை மேலும் உயர்த்தி இருக்கிறது. 2010 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில், தலைவர் கலைஞர், அண்ணா நூற்றாண்டு நூலகத்தைச் சென்னையில் திறந்தார். இப்போது கல்வி வள்ளல் காமராசரின் பிறந்த நாளில், நம்தளபதி கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில் திறந்து இருக்கிறார். இது தற்செயல் நிகழ்வன்று, கல்விக் கண் திறந்த காமராசரின் பிறந்த நாளில்தான் இந்த நூலகம் திறக்கப்படுகிறது என்று முதலமைச்சரே கூறியிருக்கிறார்!*

*காமராசரைக் காங்கிரஸ் கட்சிக்காரராகப் பார்க்காமல், கல்வி வள்ளலாகப் பார்த்த தமிழ்நாடு அரசின் திறந்த மனத்தை இது காட்டுகிறது!*


*இனிமேலாவது அறிவாலயங்கள் திறக்கப்படட்டும், அறியாமைகள் மூடப்படட்டும்!*

●

# பசிப்பிணி மருத்துவர் கலைஞர்!

வெற்றிச்செல்வன்

உலகில் மிகவும் பழமையான நோய், பசி என்னும் கொடிய நோய். "பசிப்பிணி" என்றே சொல்கிறது சங்க இலக்கியம். அரசுமுறை அமைந்த பிறகு, மக்களின் பசியைப் போக்க அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து வருகிறது. உறுபசியும் ஓவாப்பிணியும் இல்லாததுதான் நாடு என்கிறார் வள்ளுவர்.



திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைவதற்கு மொழியுணர்வு சார்ந்த தமிழ்த்தேசியம் முக்கியக் காரணங்களில் ஒன்றாக அமைந்தாலும், பொருளாதாரம் சார்ந்து மக்களின் பசி என்னும் பிரச்சினையைக் கையில் எடுத்ததும் துணைக் காரணியாகும். ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற வாக்குறுதியோடு மக்களிடம் சென்றவர் அண்ணா.

இந்திய உணவுக் கழகமே அந்நாட்களில் நெல் கொள்முதலைச் செய்து வந்த சூழ்நிலையில், தமிழ்நாட்டிற்கான அரிசி ஒதுக்கீட்டினைச் செய்யாமல் புறக்கணித்தது ஒன்றிய அரசு. இந்நிலையில் உணவுக் கழகத்திற்கு நிகராகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைத் தொடங்கினார் கலைஞர். விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்யும் பணியினை வாணிபக் கழகமே மேற்கொண்டது. 1996 ஆம் ஆண்டு, ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்பதைத் தேர்தல் அறிவிக்கையில் அறிவித்தவாறு செயல்பாட்டிற்குக் கொண்டு வந்தவர் கலைஞர்.

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டத்தைத் தொடங்கியபோது, பசியைப் போக்க வேண்டும் என்ற வள்ளலாரின் கொள்கையின் அடிப்படையில்தான் அத்திட்டத்தைத் தொடங்கியதாகக் கலைஞர் குறிப்பிடுகிறார். 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 4ஆம் நாள் நடந்த 'காந்தியடிகள்-வள்ளலார்' விழாவில் கலந்து கொண்டு இதைப் பேசியபோது மேலும் சில முக்கியமான செய்திகளைக் குறிப்பிடுகிறார் கலைஞர்.

வள்ளலாரின் புராண, சாஸ்திர எதிர்ப்பைக் குறித்தும் அவ்விழாவில் பதிவு செய்யும் கலைஞர், சாதி சமய வேறுபாடுகள் கூடாதென்றும், எவ்வுயிரையும் தம்முயிர் போல் நினைக்கும் ஆன்ம நேய ஒருமைப் பாட்டுரிமையைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் வள்ளலார் கொள்கைகளின் சிறப்பினைக் குறித்துப் பேசுகிறார். ஆனால் இதற்கெல்லாம் நேர் எதிரியான சனாதனத்தைத் தூக்கிப் பிடித்தவர் வள்ளலார் என்று பேசித் திரியும் அறிவிலிகளும் இப்போது உளர்.

வள்ளுவரையும், வள்ளலாரையும் பார்ப்பனிய ஒழிப்பு வரலாற்றில் மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டது திராவிட இயக்கம் மட்டுமே. வரலாறு அறிந்தவர்களுக்கு இது தெரியும், வம்பளக்க வந்தவர்களுக்கு அல்ல. ●

# வேண்டாம் தகுதித் தேர்வுகள்

முதுநிலை மருத்துவப் படிப்புக்கான 'நீட்' தேர்வும், வெளிநாடுகளில் மருத்துவம் படித்தவர்களுக்குத் தகுதித் தேர்வாகவும் ஒன்றிணைந்த நெக்ஸ்ட்' *(National Exit Test- NExT)* தேர்வு முறையைக் கொண்டுவர தேசிய மருத்துவ ஆணையம் முடிவு செய்துள்ளது.

எம்.பி.பி.எஸ் மற்றும் பி.டி.எஸ். மருத்துவ மாணவர்கள் நெக்ஸ்ட் தேர்வில் வெற்றி பெற்றால் ஒழிய பயிற்சி மருத்துவர் ஆக முடியாது.

எம்.பி.பி.எஸ்., இறுதியாண்டு பயிலும் மாணவர்கள், நெக்ஸ்ட் முதல் நிலைத் தேர்வில் வெற்றி பெற்றால்தான் பயிற்சி மருத்துவராக முடியும். அடுத்து நெக்ஸ்ட் இரண்டாம் நிலைத் தேர்வில் வெற்றி பெற்றால் மட்டுமே முதுநிலை மருத்துவப் படிப்பில் சேர முடியும். அயல் நாடுகளில் மருத்துவப் படிப்புப் படித்தவர்களுக்கு இந்தத் தேர்வு கட்டாயமாகும்.

"கல்வியில் நீட் தேர்வு மூலம் மாநில உரிமையைப் பறித்ததுபோல், தற்போது 'நெக்ஸ்ட்' (NExT) என்ற தேர்வு மூலமும், அனைத்து இடங்களுக்குமான ஒற்றைச் சாளர மாணவர் சேர்க்கை மூலமும் மாநில உரிமையைப் பறிப்பதற்கான முயற்சிகளை ஒன்றிய பா.ஜ.க அரசு தொடங்கியுள்ளது கண்டனத்துக்கு உரியதாகும்" என்று இத்தேர்வு மாநில உரிமையைப் பறிப்பதாக ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

மருத்துவப் படிப்பில் நீட் தேர்வைக் கொண்டு வந்ததால் தமிழ்நாட்டில் ஏழை பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, கிராமப்புற மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆட்பட்டுப் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

பா.ஜ.கவினால் கொண்டு வரப்படும் இப்படிப் பட்டத் தகுதித் தேர்வுகள் மூலமாக பொருளாதார வளமிக்க, குறிப்பிட்ட மேட்டுக்குடிச் சமூகத்தவர்கள் மட்டுமே பெரிதும் பயன் பெறுவார்கள்.

அதனால் அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத்த இருக்கும் NExT (நெக்ஸ்ட்) தேர்வையும், நடைமுறையில் இருக்கும் NEET ( நீட்) தேர்வையும் ரத்து செய்ய வேண்டும்.

இப்போது கொண்டு வந்திருக்கும் நீட் தேர்வுக்கு முன்னர் மருத்துவம் படித்த தமிழ் நாட்டு மருத்துவர்கள் மிகத் திறமையாளர்கள் என்பதை மறுக்க முடியுமா?

இந்திய ஒன்றியத்திலேயே 1976 ஆம் ஆண்டில் சென்னை, கோடம்பாக்கம் விஜயா மருத்துவமனையில் முதல் *Open heartic Surgery* யை வெற்றிகரமாக செய்துள்ளார்கள்.

எனவே நீட், நெக்ஸ்ட் தேர்வுகள் தான் மருத்துவர்களின் தகுதியை உயர்த்தும் என்று பிடிவாதம் பிடித்தால், ஏழை, எளிய மருத்துவ மாணவர்கள் எதிர்காலத்தில் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி நெக்ஸ்ட் தேர்வை தேசிய மருத்துவ ஆணையம் ஒத்திவைப்பதாக அறிவித்துள்ளது. ஒத்திவைப்பது தீர்வல்ல, அதை ரத்து செய்ய வேண்டும்.

**-எழில்**

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## தக்காளி..... தக்காளி..?

இன்று தக்காளியின் விலை நூறு ரூபாயைத் தாண்டி விற்கப்படுகிறது.

குழம்புக்குப் பயன்படும் தக்காளியின் விலை கட்டுப்படுத்தப் படவில்லையே என்று புலம்புகிறார்கள் மக்கள்.

தக்காளி பளபளப்பாகவும், சிவப்பாகவும் பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும்.

தக்காளியைப் போல, ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் பளபளப் பாகவும், சிவப்பாகவும் அழகாகவும் பேசினார்கள். நாட்டை முன்னேற்றுவோம் என்று பொய் வாக்குறுதிகளைத் தந்து ஆட்சியைப் பிடித்தார்கள் பா.ஜ.க வினர். என்ன ஆயிற்று?

- யார் வங்கிக் கணக்கிற்கும் ரூபாய் 15 லட்சம் இதுவரை வரவில்லை.
- பெட்ரோல், டீசல், முக்கியமாக ‘கேஸ் சிலிண்டர்’ விலை தாறுமாறாக ஏறி விட்டது.
- அரசுடைமையான மக்களின் சொத்துகளான எல்.ஐ.சி, விமானம் உள்ளிட்ட நிறுவனங்கள் தனியாருக்கு விற்கப்பட்டன. இரயில்வே, வங்கி உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்கள் விற்கப்பட இருப்பதாகத் தெரிகிறது.
- ஜம்மு காஷ்மீரின் சிறப்புச் சட்டத்தை ரத்து செய்து அதை இரண்டாகப் பிரித்தாகிவிட்டது.
- ஒரேநாடு, ஒரேமொழி, ஒரே பண்பாடு என்று நாட்டின் பன்முகத் தன்மைக்குமேல் தொங்கிக் கொண்டிருக்கிறது கத்தி.
- மணிப்பூர் பற்றி எரிகிறது. அங்கு மக்கள் மடிகிறார்கள்.
- எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் அமலாக்கத்துறை ‘கடமை’ தவறாமல் வேலை செய்கிறது.
- இஸ்லாமியர்களின் வாக்கு எங்களுக்குத் தேவையில்லை என்று கர்நாடகத்தில் கூறிய பா.ஜ.க, சிறுபான்மையினர், பட்டியலின, பழங்குடியினருக்கு எதிராக நிற்கிறது.
- மதச்சார்பற்ற நாட்டை மதவாதத்தால் பிளவுபடுத்தப் பார்க்கிறது. வடக்கே ராமனைத் தூக்குகிறார்கள். கர்நாடகத்தில், அனுமன் என்கிறார்கள். தமிழ்நாட்டில் முருகனுக்கு வேல் தூக்கி ஓடுகிறார்கள்.
- சொல்வது ‘எல்லோரும் இந்துக்கள்’ என்று. செய்ய முயல்வது சனாதனத்தைக் கொண்டு வருவது.
- அவர்கள் சொல்வது ராம்ராஜ்யம். உண்மையில் அது ‘மநு’ராஜ்யம்.

- அன்றைய சிவப்புத் தக்காளி இன்று காவியாகிவிட்டது.

நேற்று பா.ஜ.க. கொடுத்த தக்காளி (வாக்குறுதி) இன்று அழுகி விட்டது. இனி அது எதற்கும் பயன்படாது. என்ன செய்வது?

அழுகிய தக்காளியை வீசுங்கள். 2024 பொதுத் தேர்தலில் பா.ஜ.கவையும் தக்காளியைப் போல தூக்கி எறியுங்கள்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408



கடந்த 11.06.2023 அன்று காலை பேரவையின் சென்னை மாவட்டம் சார்பில், எழுத்தாளர் கோவி. லெனின் அவர்களின் வழிகாட்டலில் திராவிடநடை நிகழ்ச்சி சென்னை தியாகராய நகர் பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் நோக்கம் திராவிட இயக்கத்துடன் தொடர்புடைய இடங்களை நேரில் கண்டு, திராவிட இயக்க வரலாற்றை, தலைவர்களை, ஆளுமைகளை அறிந்து கொள்வது. இந்நிகழ்வில் தோழர்கள் கார்த்திக், எட்வின், நர்மதா, முத்தையா குமரன், நன்முகில், கவிஞர் திராவிடமணி, லோகபாலன், மதிவாணன், வெற்றிச்செல்வன், உதயகுமார், திராவிடப் பள்ளி மாணவர்கள் சிவஞானம், சிபி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




திராவிட இயக்கத் தமிழர் பேரவையின், சென்னை மாவட்டம் சார்பாக “இட ஒதுக்கீடும் இன்றைய சிக்கல்களும்” என்ற தலைப்பில் 6 ஆம் பயிலரங்கம் நடைபெற்றது. சென்னை தேனாம்பேட்டை அன்பகத்தில் 16-07-2023 அன்று நடைபெற்ற இப்பயிலரங்கத்தில் பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன் அறிமுக உரையைத் தொடர்ந்து, சமூக நீதி கண்காணிப்புக் குழு உறுப்பினர் தோழர் கோ.கருணாநிதி பயிலரங்க உரை நிகழ்த்தினார். தோழர்கள் ‘பெல்’ ராஜன், ஆ. லாரன்ஸ், மு. மாறன், கார்த்தி, எட்வின், இக்லாஸ், திராவிடமணி, வெற்றிச்செல்வன் உள்ளிட்ட தோழர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மகளிர் நலம் பேணும் மகத்தான முதல்வர்!

**சாரதாதேவி**

நிகழ் ஆண்டு 2023, வரும் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 முதல் தமிழ்நாட்டின் குடும்பத் தலைவிகள் கலைஞரின் உரிமைத் தொகையைப் பெற இருக்கிறார்கள்!

தமிழ் நாட்டில் சற்றொப்ப 2 கோடி குடும்பங்கள் இருக்கும். அதில் 50 விழுக்காட்டினரான 1 கோடி மகளிர் உரிமைத் தொகையை உறுதிப் படுத்தும் விதமாக திட்டக்கணக்கில் ரூபாய் 7000/- கோடியை ஒதுக்கி இருக்கிறது தமிழ்நாடு அரசு!



தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இதுபோன்றதொரு பெருந்திட்டம், இதுவரை செயல்படுத்தப் பட்டதில்லை என்று முதல்வர் சொல்லி இருப்பது, இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட எடுத்துக்கொண்ட காலத்தையும் அதன் பலன்களையும் பொதுமக்கள் புரிந்துகொள்ள உதவுகிறது.

ஆண்டொன்றுக்கு ரூபாய்12,000 கோடியை இந்த மண்ணின் மகளிருக்காக திராவிட மாடல் அரசு செலவு செய்ய இருக்கிறது. இது பல துறைகளின் ஆண்டுச் செலவை விட அதிகமானது. இதன் மூலம் பெண்களின் வளர்ச்சியிலும் பொருளாதாரத் தற்சார்பிலும் இந்த அரசு எடுக்கும் கவனம் முக்கியம் பெறுகிறது!

ஒரு குடும்பத்தில் பெண்ணின் உழைப்பு என்பது பொருளாதார ரீதியாக ஆண் வெளியே செலுத்தும் உழைப்பை விட சிறிதும் குறைந்ததில்லை என்று நீதிமன்றம் கூறியிருக்கிறது. சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி அவர்கள் கடந்த ஜூன் 23 அன்று வழங்கிய தீர்ப்பில், பெண்களுக்கு கணவன் சேர்த்த சொத்திலும் அவருடைய பாரம்பரிய சொத்திலும் கூடப் பங்கு உண்டு எனத் தீர்ப்பு அளித்துள்ளார்கள்.

2021 தேர்தலுக்கு முன்பே இந்தக் கருத்தியலை முன்வைத்த தி.மு.க. தலைவர் அவர்கள், வறுமைக்கோட்டுக்குக் கீழே, முறை சாரா வேலைகளில் பெண்கள் பணிபுரிந்து கொண்டு, தங்கள் கணவர்கள் மற்றும் குழந்தைகளின் எதிர்காலத்திற்காகப் பன்முக ஆற்றலோடு வீட்டில் உழலும் பெண்களின் நலனைப் பேணும் விதமாக மகளிருக்கு மாதம் ரூபாய்1000 உரிமைத் தொகை வழங்கப்படும் என்று தேர்தல் வாக்குறுதி அளித்தார்.

பெண்களின் ஒருமுக வரவேற்பைப் பெற்று ஆட்சியில் அமர்ந்த உடனே, பெண்களுக்கு இலவசப் பேருந்து அறிவிப்பை செய்தார். அதன் மூலம் மட்டுமே மகளிருக்கு மாதாந்திரம் ரூபாய் 1000 சேமிக்க முடிவதாகப் பெண்கள் மகிழ்ச்சியுடன் பேசிய காணொளிகளை நாம் பார்த்தோம். அது பொருளாதாரப் பிரிவுகள் அற்ற அனைத்து மகளிருக்குமான ஒரு திட்டமாக மகளிரைச் சென்று அடைந்தது.

பெட்ரோல் டீசல் விலையில் மாநில அரசு மானியம் அறிவித்து, விலை ஏற்றத்தின் பாதிப்புகளைக் குறைத்து, குடும்பத் தலைவிகளின் சுமையைக் குறைத்தது தி.மு.க. அரசு. அதுமட்டுமல்லாமல், பெண்கள் உயர் கல்விக்கான திட்டமாக மாதம் ரூபாய்1000, 12ஆம் வகுப்புக்குப் பின்னர் உயர்கல்வி கற்கும் அரசுப் பள்ளியில் பயின்ற 12 ஆம் வகுப்புக்கு மாணவிகளுக்கான உயர் கல்வித் திட்டமாக மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம் கொண்டுவரப்பட்டது.

மகளிருக்கான உரிமைத் திட்டம் விரிவாக விவாதிக்கப்பட்டது. மாநிலத்தின் கடந்த 10 ஆண்டுகால பொருளாதாரப் பின்னடைவில் இருந்து மீள்வதில் கவனம் செலுத்தி, மேனாள் நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் அதை ஓரளவு நிலை நிறுத்தியவுடனேயே முதல்வர் அவர்கள், சென்ற நிதிநிலை அறிக்கையில், இந்த ஆண்டுக்கான தொகையை ஒதுக்க உத்தரவிட்டார்.

ஏன் இன்னும் கொடுக்கவில்லை? இருக்கும் 2 கோடி குடும்பங்களுக்கும் கொடுப்பார்களா? சொன்னால் கொடுத்துவிட வேண்டியதுதானே என்ற பொறுப்பற்றோர் கேட்கும் கேள்விகளைப் புறந்தள்ளி இன்று ஓர் அருமையான திட்டத்தை, வறுமையிலும், சமூகப் பாதுகாப்பில் பின்தங்கியும் இருக்கும் ஒரு மகளிர் கூட விடுபட்டு விடாதபடியான சிறப்புத் திட்டத்தை அறிவித்துள்ளார் முதல்வர் அவர்கள்!

திட்டம் செயல்படுத்தப்பட இரண்டு மாதங்கள் இருக்கும் நிலையில் சென்ற வாரம் மாவட்ட ஆட்சியர்களும், அதிகாரிகளும் உள்ளடக்கிய கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு, குடும்ப அட்டை கூட இல்லாத, வசிப்பிடம் அற்ற ஏழை எளியோரையும் கண்டறிந்து இந்தத் திட்டத்தின் பயனைப் பெற வழி செய்திருக்கிறார் முதல்வர். தகுதி வாய்ந்த விளிம்பு நிலை மகளிர் யாரும் விடுபடாதவாறு, மனச்சான்றுடன் அதனை உறுதி செய்யும் வகையில் 13 கேள்விகளையும், 11தன்னிலை உறுதிமொழிகளையும் கொண்டு வடிவமைக்கப் பட்டுள்ளது படிவம். உரிமைத் தொகை சரியான கைகளில் சென்று சேர்வதை இது உறுதிப் படுத்துகிறது.

மாவட்ட ஆட்சியமைப்புகள், செயல்முறை வழிகாட்டுதல் கூட்டங்களை நடத்தத் தொடங்கி உள்ளனர். சற்றொப்ப 1.5 கோடி விண்ணப்பங்கள் எதிர்பார்த்த நிலையில் படிவங்கள் அந்தந்தப் பகுதி நியாய விலைக் கடைகளில் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எல்லார்க்கும் எல்லாமும் என்ற சமத்துவச் சிந்தனைக்கான திராவிட மாடலையும், அதன் வழி நின்று, தன் மக்களை நேசிக்கும் உண்மையான தலைவரையும் பெண்கள் இனிக் கொண்டாடிக் கொண்டே இருப்பார்கள்!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian